1969 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள், 415, 416, 417 ஆகிய மூன்றையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்

சித்த வைத்திய முறை.

*415 வினா : **திரு. வை சுவாமிநாதன் :**
புலவர். பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் மாவட்ட மருத்துவ மனைகளில் சித்த மருத்துவப் பிரிவைத் தொடங்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டில் தொடங்குவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) உண்டு.

(இ) இந்த ஆண்டிலேயே திருச்சிராப்பள்ளியில் தொடங்கியாயிற்று 1969–70 ஆண்டில் மேலும் ஐந்து மாவட்ட மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

*416 வினா : **திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

சித்த வைத்தியத்தின் சிறப்பினை மக்கள் உணரும்பொருட்டு விளம்பர அதிகாரிகளை நியமிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

*417—*Q.* THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state —

(*a*) whether the Government have opened a sidha dispensary in the premises of the Tamil Nadu Secretariat, and

(*b*) if so, the purpose that would be served ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) சித்த வைத்திய முறைப்படி சிகிச்சைபெற விரும்புபவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துதருவதற்காக.

புலவர். பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மஞ்சட்காமாலை, க்ஷயரோகம், குஷ்டம், புற்று போன்ற கடுமையான நோய்களைச் சித்த வைத்திய முறைகளின்மூலம் போக்க முடியும் என்பது அரசுக்குத் தெரியுமா ? அவ்வாறாயின் அம்மருத்துவப் பயிற்சி பெற்ற ஒருவரை அந்த முறைகளுக்குத் தனி நெறியாளராக அமைத்துத் தனி ஆய்வுக்கூடம் ஒன்றைத் தமிழகத்தில் உருவாக்கிச் செம்மையுடன் பேணிக்காக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சித்த மருத்துவத்தின் நல்ல சிறப்புக்களையெல்லாம் அறிந்துதான், அதனால் பல நோய்களுக்கு நல்ல சிகிச்சை அளிக்க முடியுமென்று நம்பிக்கையிருப்பதால்தான் அரசாங்கம் சித்த வைத்திய முறையை ஏற்றுக்கொண்டு, கல்லூரிகளுக்கும், மருத்துவ மனைகளுக்கும் ஏற்பாடு செய்துகொண்டு வருகிறது என்பதைக் கனம் உறுப்பினரவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். மற்றவை யோசிக்கப்படும்.